



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2024) விருதுநகர் மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகத்திற்கான கட்டிடத்தை திறந்து வைத்தார். அப்போது மாவட்ட ஆட்சியரை இருக்கையில் அமர வைத்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, சி.வி.கணேசன் மற்றும் நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

# ஜெனிவாவில் பருவ நிலை மாற்றம் குறித்த மாநாடு!

## பொன்குமார் பங்கேற்று உரையாற்றினார்!

ஜெனீவா, நவ. 12-

பருவநிலை மாற்றம் அதனால் தொழிலாளர்கள் மீது ஏற்படும் தாக்கம் குறித்தும், அதிலிருந்து தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது குறித்தும் சர்வதேச மாநாடு ஜெனிவாவில் நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டிலிருந்து கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவரும் விவசாயிகள் தொழிலாளர் கட்சியின் தலைவருமான பொன்குமார் கலந்து கொண்டு உரையாற்றினார்.



நவம்பர் 7 மற்றும் 8 தேதிகளில் ஜெனிவாவில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளிலிருந்து சுமார் 100 பிரதிநிதிகள் குறிப்பாக தொழிற்சங்க தலைவர்கள் பங்கு கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பருவநிலை மாற்றம் குறித்தும் அதன் தாக்கங்கள் குறித்தும் இதிலிருந்து தடுப்பதற்கு அந்த அமைப்புகள் எடுத்து வரும் நடவடிக்கை குறித்தும் விளக்கினர்.

இந்த நிகழ்ச்சியில் விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் ஆற்றிய உரை வருமாறு:

பருவநிலை மாற்றம் என்பது, குறித்த காலத்தில் மழை பெய்யாமல் அவ்வப்போது மழை பெய்வது, அளவு கடந்து மழை பெய்வது, அதனால் ஏற்படக்கூடிய வெள்ளம், மண் சரிவு, கடல் நீர்மட்டம் உயர்வு, வெப்பநிலை அதிகரிப்பு போன்ற பல்வேறு இயற்கை பேரிடர்கள் ஏற்படுகின்றன. இதனால் உடனடியாக பாதிக்கக் கூடியவர்கள் சாமானியர்கள், சாதாரண உழைக்கும் தொழிலாளர்களாவார். குறிப்பாக தற்போது வெப்பநிலை உயர்ந்து கொண்டே செல்வது பேராபத்தானதாகும். கடந்த ஆண்டு இந்தியாவில் ஏப்ரல் மே மாதங்களில் 40 டிகிரிக்கு மேல் வெப்பநிலை உயர்ந்தது. இதனால் வெளியில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் குறிப்பாக கட்டுமானத் தொழிலாளர்கள் போன்ற அமைப்புசாராத் தொழிலாளர்களுடைய உடல் நிலை மிகப்பெரிய அளவில் பாதிப்பை அடைகிறது. இப்படி கடும் வெயில் மற்றும் மழையால் நேரடியாக பாதிப்படைபவர்கள் கட்டுமானத் தொழிலாளர் உள்ளிட்ட அமைப்புசாரா தொழிலாளர்கள் ஆவர். அவர்களை பாதுகாப்பதற்கு உலகளாவிய விவாதங்களும், வழிமுறைகளும் கண்டறியப்பட்டு வருகின்றன. குறிப்பாக மற்றும் ஐ.நா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவது பாராட்டுதலுக்குரியது.

தமிழ்நாட்டில் கடும் வெயிலால் பாதிக்கக்கூடிய தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு பணி நேரத்தில் மாற்றங்களை செய்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு அறிவிப்பினை வெளியிட்டார். அதாவது காலை 11 மணிக்கு மேல் மாலை 3 மணிக்குள் வெயிலில் வேலை செய்ய தொழிலாளர்களை அனுமதிக்க கூடாது என்பதற்கான உத்தரவு. அதனை தொடர்ந்து இந்த கடும் வெயில் அலையை ஒரு மாநில இயற்கை பேரிடராக அறிவித்து ஆணையை முதலமைச்சர் வெளியிட்டுள்ளார். இதன் மூலம் வெப்ப அலையால் பாதிக்கக்கூடிய தொழிலாளர்கள் குறிப்பாக மரணமடையக்கூடிய தொழிலாளர்களின் குடும்பங்கள் 4 லட்ச ரூபாய் நிவாரணம் பெறுவதற்கு வழிவகை ஏற்பட்டு இருக்கிறது. அது போக வெப்ப அலைகளால் பாதிக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு மருத்துவ உதவிகள், நல்ல குடிநீர் வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை இந்த ஆணை உருவாக்கி தருகிறது.

இந்தியாவிலேயே இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்த முதல் மாநிலம் தமிழ்நாடு, முதல் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் ஆவார். எல்லா நிலையிலும் இந்தியாவிற்கு வழிகாட்டக் கூடிய எங்கள் முதலமைச்சர் இந்த பருவநிலை மாற்றத்திலும் தான் முதன்மை இடத்தைப் பெற்று பல்வேறு திட்டங்களை அறிவித்து வருகிறார். குறிப்பாக அமைச்சரவையில் இந்தப் பருவநிலை மாற்றத்தை கவனிப்பதற்கு என தனியாக ஒரு துறையை உருவாக்கி ஒரு அமைச்சரின் கீழ் செயல்பட வழிவகை செய்துள்ளார். பருவநிலை மாற்றத்திற்கான மிஷன் மற்றும் விஷன்களுடன் திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பசுமை தமிழ்நாடு மிஷன், தமிழ்நாடு வெட்லேண்ட் மிஷன், தமிழ்நாடு கிளைமேட் சேஞ்ச் மிஷின், கிளைமேட் ஸ்மார்ட் வில்லேஜ், பசுமை பள்ளி திட்டம், பசுமை ஸ்டூடியோ போன்ற பல்வேறு நோக்கங்கள் மூலம் இந்தப் பசுமை நிலை மாற்றத்தை தடுப்பதற்கான முயற்சிகளை தமிழ்நாடு எடுத்து வருகிறது. அதைப் போல தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் என்ற ஒரு தனி துறையும் இந்தப் பருவநிலை மாற்றத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவது குறிப்பிடத்தக்க தாகும்..

குறிப்பாக இந்த பருவநிலை மாற்றத்தால் உடனடியாக பாதிக்கக் கூடியவர்கள் நிரந்தர வீடு இல்லாத குடிசைகளில் வாழும் தொழிலாளர்களே ஆவர். எனவே தான் குடிசைகள் இல்லாத மாநிலமாக உருவாக்குவதற்கு தமிழ்நாடு அரசு திட்டங்களைத் தீட்டி அனைவருக்கும் கான்கிரீட் வீடு கட்டுவதற்கு உதவிகளை செய்து வருகிறது. அதைப் போல என் தலைமையில் உள்ள கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியமும் வாரியத்தில் பதிவு பெற்ற அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் கான்கிரீட் வீடு கட்டிக் கொள்வதற்கு 4 லட்ச ரூபாய் இலவசமாக வழங்கக்கூடிய திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம். இப்படி தமிழ்நாட்டில் தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு தமிழ்நாட்டில் தொழிலாளர்களுக்கு ஆதரவான ஒரு அரசு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்திருப்பது காரணமாகும். இப்படி தமிழ்நாடு அரசு பருவநிலை மாற்றத்தை தடுப்பதற்கும், தொழிலாளர்களின் பாதிப்புகளை குறைப்பதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்று தலைவர் பொன்குமார் அவர்கள் அறிவித்த போது அரங்கு கைத்தட்டி வரவேற்றது.

இதற்கிடையில் நாங்கள் இந்தியத் தொழில் கூட்டமைப்பு இன் இந்திய பசுமை கட்டிட கவுன்சிலுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கையெழுத்திட்டுள்ளோம். அதன் மூலம் பசுமை கட்டுமானத்தை ஊக்கப்படுத்தி, பருவநிலை மாற்றத்தை குறைப்பதற்கானப் பணிகளில் இணைந்து செயலாற்றி வருகிறோம். பசுமை கட்டுமானத் திட்டத்தில் தொழிலாளர்களின் தரமான வேலையை இணைப்பதற்கு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். கட்டுமான மற்றும் மனைத் தொழிலில் உள்ள அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைத்து கட்டுமானம் மற்றும் மனைத் தொழில் கூட்டமைப்பு என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இந்த அமைப்பில் தொழிலாளர்களும், வேலை அளிப்பவர்களும் ஒன்றாக இருப்பதால் இணைந்து இந்தப் பருவநிலை மாற்றத்தால் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அதே போல மூசமூலம் பருவநிலை மாற்றத்தை குறைப்பதற்கு மரங்கள் நடுகிற நிகழ்வை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். இப்படி பல்வேறுபட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பொன் குமார் உரையாற்றினார்.

# தேனி வடக்கு மாவட்ட BLA2 ஆலோசனைக் கூட்டம் -பாக இளைஞரணி சமூக வலைதளப்பயிற்சி!

## மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்.பி. அறிக்கை!

தேனி, நவ.12-

தேனி வடக்கு மாவட்ட BLA2 ஆலோசனை கூட்டம் -பாக இளைஞரணி சமூக வலைதளப் பயிற்சி குறித்து மாவட்டசெயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: தேனி வடக்கு மாவட்ட பி.எல்.ஏ. 2 ஆலோசனைக் கூட்டம் மற்றும் பாக இளைஞரணி சமூக வலைதளப் பயிற்சி மாவட்ட செயலாளரான எனது தலைமையில் போடிநாயக்கனூர் தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன் மற்றும் பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம் ஆகியோர் முன்னிலையிலும் இளைஞரணி சமூக வலைதளப்பயிற்சி மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா மற்றும் பயிற்சியாளர்கள் அமுதரசன், இளமாறன் ஆகியோரது முன்னிலையில் கீழ்க் கண்ட இடங்களில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக ஒருங்கிணைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், வார்டு, கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், பாக முகவர்கள் (பி.எல்.எ 2) பாக இளைஞரணியினர், சார்பு அணி நிர்வாகிகள்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி பி.எல்.எ 2 ஆலோசனை கூட்டம், பாக இளைஞரணி சமூக வலைதளப் பயிற்சி**

இன்று (12.11.2024,) நேரம் : காலை 9.00 மணி ,இடம் : வர்த்தகர் சங்க மண்டபம் போடிநாயக்கனூர்.

நேரம் : காலை 10.00 மணி இடம் : ஸ்ரீவான்மதி மகால் - போடிநாயக்கனூர்.

**பெரியகுளம் சட்டமன்றதொகுதி - பாக இளைஞரணி சமூக வலைதளப் பயிற்சி**

இன்று (12.11.2024) நேரம் : மாலை 3.00 மணி , இடம் : மீனாட்சி சுந்தரேஸ்வரர்

வரட்டாறு - மதுராபுரி

இன்று ( 12.11.2024 ) நேரம் : மாலை 4.00 மணி இடம் : NRT மண்டபம் தேனி

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பள்ளிக்கல்வித்துறை – மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தியும்

# ஒன்றிய அரசு இதுவரை நிதி ஒதுக்காதது கவலை அளிக்கிறது!

## 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, நவ. 12-

'மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தியும் பள்ளிக் கல்வித் துறைக்கான நிதியை ஒன்றிய அரசு இதுவரை ஒதுக்காதது கவலை அளிக்கிறது' என 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.



தலையங்கம்
தினத்தந்தி
11.11.2024 (திங்கட்கிழமை)
மத்திய அரசாங்கம் தரவில்லை; தமிழக அரசு கொடுத்தது!

இதுகுறித்து 11.11.2024 தேதிய 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

மாநில அரசின் நிதியில் இருந்து செப்டம்பர் மாதத் துக்கான சம்பளம் வழங்கப் படும் என அன்பில்மகேஷ் அறிவித்தார்.

பொதுவாக தமிழக அரசு ஊழியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் கடைசி நாளிலேயே சம்பளம் அவர்களின் வங்கிக்கணக்குகளில் போய் சேர்ந்துவிடும். மாதம் பிறந்தால் ல்தான் சம்பளம் என்பது அவர்களுக்கு கிடையாது. ஆனால், சமக்ர சிக்சா அபியான் அதாவது, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின்கீழ் பணியாற்றும் 15 ஆயிரம் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாதவர்களையும் சேர்த்து 32,500 பேருக்கு கடந்த செப்டம்பர் மாதத்துக்கான சம்பளம் வழங்கப்படாமல் இருந்தது. இதற்கு காரணம் மத்திய அரசாங்கத்தால் இந்தத் திட்டத்துக்கு வரவேண்டிய தவணைத்தொகை வரவில்லை.

இந்தத் திட்டம் ஒன்றிய அரசாங்க திட்டம் என்றாலும், தமிழக அரசின் பங்களிப்பும் அதில் இருக்கிறது. செலவை ஒன்றிய மாநில அரசுகள் 60:10 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. 2018ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டத்தில் இதுவரை எந்த பிரச்சினையும் இல்லாமல் இருந்தது. இதில் பணியாற்றும் பகுதிநேர ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.12,500 சம்பளமாக வழங்கப்பட்டு வந்தது.

ஒன்றிய அரசாங்கம் இந்த திட்டத்துக்கான நிதியை 4 தவணைகளாக ரூ.21.52 கோடியை வழங்க வேண்டும். அந்த வகையில், இந்த கல்வி ஆண்டுக்கான முதல் தவணை தொகை ரூ.373 கோடி, வழக்கமாக ஜுன் மாதத்திலேயே வந்துவிடும். ஆனால், இன்னும் வரவில்லை. இதற்கிடையில் 2வது தவணை தொகைக்கான காலமும் முடிந்து விட்டது. இதுமட்டுமல்லாமல், கடந்த நிதியாண்டுக் கான கடைசி தவணைத்தொகை ரூ.219 கோடியும் கொடுக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. இதுவரை தமிழக அரசு தன் பங்குக்குரிய தொகையான ரூ.1,134 கோடியை வைத்து சம்பளம் மற்றும் மற்ற செலவுகளை சமாளித்துவந்தது. அதுவும் தீர்ந்து போனதால், செப்டம்பர் மாதத்துக்கான பகுதி நேர ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் போனது.

நிதி வழங்காததற்கு ஒன்றிய அரசாங்கம் கூறும் காரணம் விசித்திரமானது. பி.எம்.ஸ்ரீ பள்ளித்திட்டத்தில் தமிழக அரசு இணைவதாக கையெழுத்து போட்டால், உடனே நிதி வழங்கப்படும் என்று கூறுகிறது. பி.எம்.ஸ்ரீ திட்டத்தில் சேர்ந்தால் தேசியக்கல்வி கொள்கையை ஏற்றுக்கொண்டது போல ஆகிவிடும். இப்போது தமிழக அரசு தமிழ். ஆங்கிலம் என்ற இருமொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்தி வருகிறது. பி.எம். ஸ்ரீ திட்டத்தில் இணையும் நேரத்தில் தானாகவே மும்மொழிக்கல்வி கொள்கையையும் ஏற்றுக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும் என்பதால் தமிழக அரசு இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்த நேரத்தில் கூட முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பி.எம்.ஸ்ரீ பள்ளித்திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வது தொடர்பாக இறுதி முடிவு எட்டப்படும்வரை காத்திராமல். ஏற்கனவே சமக்ர சிக்சா திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகளுக்கான நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை ஏற்று உடனடியாக நிதியை ஒன்றிய அரசாங்கம் ஒதுக்கினால்தான், இந்த ஆசிரியர்களுக்கு சம்பளமும் கொடுக்க முடியும். கல்வி நலன் சார்ந்த சில திட்டங்களையும் நிறைவேற்றவும் முடியும் என்ற நிலை இருந்தது. இந்தநிலையில், ஆசிரியர்கள் மற்றும் அமைச்சு பணியாளர்கள் சம்பளம் கோரி போராட்டம் நடத்தினர். இந்த போராட்டத்தின் இறுதியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாநில அரசின் நிதியில் இருந்து செப்டம்பர் மாதத்துக்கான சம்பளம் வழங்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி, செப்டம்பர் மாத சம்பளம் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அக்டோபர் மாத சம்பளமும் தீபாவளி பண்டிகையை கருத்தில் கொண்டு முன்கூட்டியே மாநில அரசு வழங்கியது. இதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தற்காலிக தீர்வு கிடைத்தாலும், மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தியும், ஒன்றிய அரசு இதுவரை நிதி ஒதுக்காதது கவலை அளிக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



விளாத்திகுளத்தில் நடைபெற்ற விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள் ஆலோசனை கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் திருமதி பெ.கீதா ஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,தலைமை செயற்குழு உறுப்பினர் மார்கண்டேயன், விளாத்திகுளம் சட்டமன்றத் தேர்தல் பார்வையாளர்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.உடன் விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னமாரிமுத்து விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன் புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன் புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ் புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதக்கண்ணன் ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன் விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி புதூர் பேரூர் கழகச் செயலாளர் மருதுபாண்டியன் எட்டையாபுரம் பேரூர் கழக செயலாளர் பாரதிகணேசன் பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜாக்கண்ணு, முத்துலட்சுமி மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் நடராஜன் விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ் எட்டயபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் ராமலட்சுமி சங்கரநாராயணன் புதூர் பேரூராட்சி மன்ற தலைவர் வனிதா அழகுராஜ் தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இமானுவேல் தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மகேந்திரன் உட்பட பாக முகவர்கள்,கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்ட

# முன்னாள் சன் டிவி செய்தியாளர் மனைவி மரணம்!

சிவகங்கை. நவ. 12.

சிவகங்கை மாவட்ட சன் டி.வி. செய்தியாளராக பணிபுரிந்தவர் மீ.ரத்தினம். இவர் மனைவி மரணம் அடைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிவகங்கை மாவட்ட முன்னாள் சன் டி.வி.செய்தியாளரும், மாவட்ட என்.ஜி.ஓ. சங்கத் தலைவரும், முன்னாள் நகர்மன்ற உறுப்பினராக வும் இருந்தவர் மீ. ரெத்தினம். இவரது மனைவி ரெ.சொர்ணம். வயது82. இவர் சிவகங்கையில் மரணம் அடைந்தார்.

இவருக்கு மூன்று மகன், மூன்று மகள் உள்ளார்கள்.

மரணம் அடைந்த சொர்ணத்தின் உடலுக்கு சிவகங்கை நகர்கழக செயலாளரும் நகர்மன்ற தலைவருமான சி.எம்.துரை. ஆனந்த், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் வே.ராஜசேகரன், எஸ்.குணசேக ரன் மற்றும் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.



திராவிட முன்னேற்றக் கழகம் தூத்துக்குடி தெற்கு மாவட்டம் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள்(BLA2) கூட்டம் உடன்குடி மேற்கு ஒன்றியம் தண்டு பத்து மாவட்ட கழக அலுவலகம் மற்றும் செட்டியாபத்தில் நடைபெற்றது தொகுதி பார்வையாளர் டாக்டர் சபி M. சுலைமான் மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் பங்கேற்று பாக முகவர்களுக்கு புதிய வாக்காளர்கள் சேர்த்தல், முகவரி மாற்றம்,பெயர் மாற்றம், பற்றிய ஆலோசனை வழங்கினார் இதில் மாவட்ட பொருளாளர் VP.ராமநாதன், டாக்டர்.R. சுதானந்தம் ,பொதுக்குழு உறுப்பினர்கள் சாகுல்ஹமீது ,முத்து செல்வன் , மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும் யூனியன் சேர்மன் ஜனகர் ,அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர் கிருபாகரன், அக்னல் பிரீஸ் ,உடன்குடி மேற்கு ஒன்றிய கழக செயலாளரும் யூனியன் சேர்மன் TP.பாலசிங்,மற்றும் பாக முகவர்கள்,திமுக பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.